


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான், தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், எம்.கே.கான், எஸ்.கே. நவாஸ், முகமது பஷீர், சையத் ரெய்ஹான், திருமதி பாத்திமா முசாபர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் மற்றும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் (மு.கூ.பொ) தாரேஸ் அகமது ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைவர் ஆர். அப்துல் கரீம், மாநில பொதுச் செயலாளர் ஏ. முஜிபுர் ரஹ்மான், மாநில பொருளாளர் ஏ. இப்ராஹீம், மாநிலச் செயலாளர் ஐ.அன்சாரி, மேலாண்மைக் குழு தலைவர் ஷம்சுல்லுஹா ரஹ்மானி, தணிக்கை குழு தலைவர் எம்.எஸ். சுலைமான் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃப் வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பாக சந்தித்துப் பேசினார்கள். இந்த சந்திப்பின் போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் ஆணைப்படி - 2026 சட்டமன்றத் தேர்தலில்

# 200 இடங்களுக்கு மேல் வென்றிட சமூக வலைதளப் பயிற்சி!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 20-

கழகத் தலைவர் ஆணைப்படி, 2026 சட்டமன்றத் தேர்தலில், 200 இடங்களுக்கு மேல் வென்றிட, சமூக வலைதளப் பயிற்சி, இளைஞரணிச் செயலாளரின் முயற்சிகளுக்கு உறுதுணை என தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிட நாயகர் - கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 18.9.2024 புதன்கிழமையன்று சென்னையில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர், தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அணியின் இணைச்செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானங்கள்:

1. பவள விழா காணும் நம் கழகம் இன்னும் பல நூறாண்டுகள் தமிழ்நாட்டிற்கும் - தமிழ் மக்களின் ஏற்றத்துக்கும் பாடுபடும் வகையில், பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, நம் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான ஒரே நம்பிக்கையாகத் திகழும் தி.மு.க. எனும் பேரியக்கத்தின் தொடர் பயணத்தில் கழகத் தகவல் தொழில் நுட்ப அணி களத்திலும் சமூக வலைதளத்திலும் அயராது பாடுபடும், இளம் தலைவர் அவர்களின் முயற்சிகள் அனைத்திற்கும் துணை நிற்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

2. நடந்து முடிந்த 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் தி.மு.கழகம் தலைமையிலான அணி 40க்கு 40 தொகுதிகளையும் வென்றிட வியூகம் வகுத்து, அதனை நிறைவேற்றும் வகையில் ஓயாது உழைத்து, நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணியை வலிமையான எதிர்க்கட்சி அணியாகவும், பா.ஜ.க.வை மைனாரிட்டி அரசாகவும் மாற்றியதில் முதன்மைப் பங்காற்றிய திராவிட நாயகர் - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை கழகத் தகவல் தொழில்நுட்ப அணி வாழ்த்தி மகிழ்வதுடன், கழகத் தலைவரின் வெற்றி இலக்கை முழுமையாக அடைவதற்கு நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் அயராது பாடுபட்டவரும், சட்டமன்றத் தேர்தல் இலக்கை எட்டும் வகையில் கழக ஒருங்கிணைப்புக் குழுவை திறம்பட நடத்திவரும் கழகத்தின் இளந்தலைவர் இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மேலும் பல புதிய உயர் பொறுப்புகளில் உச்சங்களைத் தொட்டுப் பணியாற்றிட கழகத் ததவல் தொழில்நுட்ப அணி என்றும் உறுதுணையாக இருக்கும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

3. தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக F4 கார் பந்தயத்தை பல தடைகளையும் விமர்சனங்களையும் தகர்த்து எறிந்து உலகமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வெற்றிகரமாக நடத்திய கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த கூட்டம் மனதார வாழ்த்தி மகிழ்ந்து இந்தப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

4. கழகப் பவள விழா ஆண்டின் முப்பெரும்விழாவில் பெரியார் விருது பெற்ற திருமிகு.பாப்பம்மாள், அண்ணா விருது பெற்ற அறந்தாங்கி மிசா இராமநாதன், கலைஞர் விருது பெற்ற திருமிகு. ஜெகத்ரட்சகன் எம்.பி., பாவேந்தர் விருது பெற்ற திருமிகு.தமிழ்தாசன், பேராசிரியர் விருது பெற்ற திருமிகு. வி.பி.இராசன் ஆகிய கழகத்தின் மூத்த முன்னோடி களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, பவள விழா ஆண்டில் முதன் முதலாக அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள திராவிட நாயகர் கழகத் தலைவர் அவர்கள் பெயரிலான விருதுக்கு மகிழ்ச்சியையும், அதனைப் பெற்றுள்ள ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. நூற்றாண்டு நாயகர் - முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெருமையை இந்தியா முழுமையும் அறியும் வகையில், கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிட்டுச் சிறப்பித்ததற்கும், அதற்கான விழாவை இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் தலைவர் கலைஞரின் சாதனைச் சரித்திரத்தை எடுத்துரைக்கும் வகையில் நடத்திக் காட்டியதற்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் நம் திராவிட நாயகன் அவர்களைப் பாராட்டி கழகத் தகவல் தொழில்நுட்ப அணி இத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

6. வாய்ப்புக்களின் நாடு என அழைக்கப்படும் அமெரிக்காவிற்குச் சென்று ரூபாய் 7,616 கோடி மதிப்பு முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் சென்னை, கோவை, மதுரை உள்பட பல இடங்களிலும் புதிய தொழிற்சாலைகள் உருவாகிடவும், அதன் மூலம் 11,566 பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புகள் கிடைத்திடவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள திராவிட நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து அவரது ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார இலக்கு நிறைவேறிட தகவல் தொழில்நுட்ப அணி உறுதுணையாக இருக்கும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

7. எதிர்வரும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கு முன்னதாக தகவல் தொழில்நுட்ப அணியை மேலும் வலிமைப்படுத்தி, அடுத்த 6 மாதங்களுக்குள் 1,58,714 புதிய நிர்வாகிகளை நியமித்து, கழகத்தின் தொடர் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் வலுவானக் கட்டமைப்பை உருவாக்குவோம் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

8. சமூக வலைத்தளத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணியும் கழகத்தின் மற்ற அணிகளும் சீரிய முறையில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக கழக மாவட்டங்கள்தோறும் பயிற்சிக் கூட்டங்கள் 3 மாதங்களுக்குள் நடத்தி முடிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

9. தமிழ்நாடு முழுவதும் அணி செயலாளர் தலைமையில் மண்டல வாரியாக திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்படுகிறது.

10. ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் கோப்புகள் இனி இந்தி மொழியில் அனுப்பப்படும் என்கிற அறிவிப்புக்கு தகவல் தொழில்நுட்ப அணி கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிரான கண்டனத்தை இந்திய அளவில் முன்னெடுக்கும் வகையில் சமூக வலைதள செயல்பாடுகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 18.9.2024 புதன்கிழமையன்று சென்னையில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அணியின் இணைச்செயலாளர், மாநில துணைச் செயலாளர்கள், மண்டல பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.





தி.மு.க பவள விழாவினை முன்னிட்டு 28.9.2024 அன்று கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ள காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆய்வு செய்தார். அருகில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், காஞ்சி வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### பீகாரில் பட்டியலின

# மக்களின் வீடுகள் எரிப்பு!

## ராகுல் காந்தி எம்.பி. கடும் கண்டனம்!



புதுடெல்லி, செப்.20-

பீகாரில் பட்டியலின மக்களின் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவத்துக்கு காங்கிரஸ் முன்னணி தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறார்கள் என தெரிவித்துள்ள அவர், உரிய நிவாரணத்தை மாநில அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி பெற்றுதர வேண்டும் என்று ராகுல்காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பரிதி இளம் சுருதி தலைமை – ஆர்.எம்.ரங்கநாதன் முன்னிலை!

# எழும்பூர் 99வது வட்டத்தில் தி.மு.க. பவள விழா - கொடியேற்று விழா!

## ஓ.ஏ. நாகலிங்கம் – சொ.வேலு – வி.சுதாகர் பங்கேற்பு!

சென்னை,செப்.20-

திராவிட முன்னேற்ற கழக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளரும், விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், பெருநகர சென்னை வளர்ச்சி குழும ஆணைய தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி திராவிட முன்னேற்ற கழகத்தின் பவள விழா மற்றும் முப்பெரும் விழாவை கொண்டாடும் வகையில் தி.மு.க. அயலக அணி சார்பில் மாநில துணைச்செயலாளரும் எழும்பூர் தொகுதி 99-வது வார்டு பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி தலைமையில் கழக கொடி ஏற்றி அறுசுவை அசைவை உணவு வழங்கும் நிகழ்ச்சி 99வது வட்ட செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன் முன்னிலையில் புரசைவாக்கம் நெடுஞ்சாலை அருகே வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக நெசவாளர் அணியின் மாநில துணை தலைவரும், எழும்பூர் தொகுதி பார்வையாளருமான ஓ.ஏ.நாகலிங்கம், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினருமான சொ.வேலு ஆகியோர் கலந்து கொண்டு "சமூகநீதி நாள் உறுதி மொழியை" மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி வாசிக்க கழக நிர்வாகிகள் உறுதிமொழி ஏற்றனர்.

அதனைத் தொடர்ந்து கழக இருவண்ண கொடியினை ஏற்றி, சுமார் 500 நபர்களுக்கு அறுசுவை அசைவ உணவினை வழங்கினர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், மாவட்ட பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் புரசை தாமோதரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.நந்தீஸ்வரன், பகுதி கழக நிர்வாகிகள் தில்லை குமார், பி.சி.சம்பத்குமார், பகுதி பொருளாளர் சூளை சுப்புராயலு, தெற்கு பகுதி துணைச் செயலாளர் டி.வி.வேலு, அன்னபூரணி, மாவட்ட பிரதிநிதிகள் டி.சபஸ்டின், வழக்கறிஞர் ஜெய்சங்கர், மு.முரளிதரன்,

மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் புதுப்பேட்டை ரகிப்புல்லா, கா. பிரகதீஸ்வரன், பகுத்தறிவு பேரவை துணை மாவட்ட அமைப்பாளர் பி.புரசை சதீஷ், எஸ்.எம். முகமது இப்ராஹிம், 61 "அ" வட்ட செயலாளர் மொய்தீன், பகுதி துணை அமைப்பாளர் பூபதி நகர் எஸ்.எம்.ரவி, 99வது வட்ட கழக நிர்வாகிகள் கே.ஆர்.முரளி, துணை செயலாளர்கள் வரதராஜன், ரா.முரளி, பொருளாளர் ஆர். எஸ்.வெங்கடேசன், பகுதி பிரதிநிதிகள் சுகுமார், fish மோகன், சாலைமா நகர் மாது, 99வது "அ" வட்ட துணை செயலாளர்கள் சென்ட்ரிங் இளங்கோவன், கனகா, ஜான், நேரு பார் முனாக், நரேஷ், சாஸ்திரி நகர் ஹரி, சரவணா, குணசேகரன், பூபதி நகர் வெங்கடேசன், பூபதி நகர் கெஜா, சாலைமா நகர் கருணாகரன், மகளிர் அணி ஓசான் குளம் மஞ்சுளா, பிளவர்ஸ் ரோடு மீனா, சரளா, பகுதி பிரதிநிதி பெரியமேடு அறிவுநிதி, கோபி, அமர்நாத், விக்னேஷ், பிரேம் மற்றும் ரசாக், வழக்கறிஞர் ஈமத்திரி, தணிகாசலம், புல்லாபுரம் வினோத், புரசை பாலமுருகன், எழும்பூர் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுகன்யா உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் அணி பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



அண்மையில் ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த வக்ஃப் சட்டத் திருத்த மசோதா–2024 மீது ஆட்சேபனை தெரிவித்து தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தயாரித்துள்ள அறிக்கையை திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை நேரில் சந்துத்து நேற்று (19.09.2024) தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை மாநில பொதுச்செயலாளர் மௌலானா மரு. அன்வர் பாதுஷாஹ் உலவி, துணைப் பொதுச்செயலாளர்கள் மௌலானா இல்யாஸ் ரியாஜி, மௌலானா மரு. காஜா முயீனுத்தீன் ஜமாலி ஆகியோர் வழங்கினர். தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத்தலைவர் இறையன்பன் குத்தூஸ் உடனிருந்தார்.